# COVID-19 எதிர்வினை

புதுப்பித்தல்களைக் காண அடிக்கடி இந்தப் பக்கத்திற்கும் மாகாணம் முழுதுமுள்ள முகமைகளிடமிருந்து சமீபத்திய தகவல்களைக் காணcoronavirus.wa.gov பக்கத்திற்கும் வருகை தாருங்கள் (ஸ்பானிய மொழி, ரஷ்ய மொழி, வியட்நாமிய மொழி, சீனமொழி, ஜப்பானிய மொழி, கொரிய மொழி, பஞ்சாபி, சோமாலிய மொழி, உக்ரேனிய மொழி).

## UTC கட்டிடம் பொதுமக்களுக்கு மூடப்பட்டுள்ளது

அடுத்தகட்ட அறிவிப்பு வரும்வரை UTC கட்டிடம் பொதுமக்களுக்கு மூடப்பட்டுள்ளது. அத்துடன் அனைத்து UTC பணியாளர்களும் வீட்டிலிருந்து பணியாற்றுகின்றனர்.

பல சேவைகள் எங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறுகின்றன. உதவி பெறுவதற்கு அல்லது வாடிக்கையாளர் புகாருக்கு திங்கள் முதல் வெள்ளிவரை காலை 8 முதல் பின்மதியம் 5 வரை 1-888-333-WUTC (9882) என்ற எண்ணில் அழைக்கவோ அல்லது இணையபக்கத்தில் உரையாடவோ செய்யலாம். தொலைபேசி மொழிபெயர்ப்புச் சேவைகள் உள்ளன.

## Stay Home, Stay Healthy

மார்ச் 23ல், ஆளுநர் Jay Inslee Stay at Home, Stay Healthy ஆணையை வெளியிட்டார். மே 1 ல் அவர் ஆணையை நீட்டித்ததோடு மறுதிறப்புக்காக நான்கு கட்ட Safe Start Washington மாதிரியை அறிமுகப்படுத்தினார். மாவட்டங்கள் தனித்தனியாக கட்டங்களைக் கடக்கின்றன. எனவே நிறுவனங்கள் அவை இயங்கும் மாவட்டங்களில் எந்த வழிகாட்டுதல்கள் பொருந்தும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

- உங்கள் தொழில் நிலையை தெளிவுபடுத்திக் கொள்ளுதல் அல்லது அத்தியாவசியமானதாக கருதப்படும் உங்கள் தொழில் விண்ணப்பத்திற்கு, தயவுசெய்து இந்த படிவத்தை சமர்ப்பிக்கவும் (ஆங்கிலத்தில் மட்டும்).

## உபயோகக் கட்டண உதவி

ஆளுநர் Inslee அனைத்து எரிபொருள், தரைவழி தொலைபேசி மற்றும் குடிநீர் நிறுவனங்களையும் சேவையை துண்டித்தல் அல்லது கூடுதல் கட்டணங்களை வசூலித்தல் ஆகியவற்றுக்கு ஜூலை 28 வரை தடைவிதித்து ஆணை பிறப்பித்துள்ளார்.

- வாடிக்கையாளர்கள் உபயோகக் கட்டணங்களைச் செலுத்த உதவுவதற்கு நிறுவனங்களுக்கு நிதி கிடைக்கிறது.
- உங்கள் உபயோகக் கட்டணத்தைச் செலுத்த உதவி தேவையெனில், உங்கள் நிறுவனத்தை தொடர்புகொள்ளவும் அல்லது ஆணையத்தை 1-888-333-WUTC (9882) என்ற எண்ணில் திங்கள் முதல் வெள்ளிவரை காலை 8 முதல் பின்மதியம் 5 வரையிலோ அல்லது consumer@utc.wa.gov என்ற மின்னஞ்சல் முகவரியில் எப்போது வேண்டுமானாலும் தொடர்புகொள்ளலாம்.
- இந்த ஆணை காலாவதியானதும் உங்கள் கட்டணங்களை நீங்கள் செலுத்தவேண்டி வரும். எனவே, இப்போது உங்களால் செலுத்தமுடிந்தால், நீங்கள் செலுத்தவும்.

## ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிறுவனங்கள்

UTC ஒழுங்குமுறைப்படுத்தும் உபயோக மற்றும் போக்குவரத்து நிறுவனங்கள் தங்களது கொள்கைகளையும் நடைமுறைகளையும் இந்த நேரத்தில் சரிசெய்துகொள்ள நாங்கள் அவற்றுடன் நேரடியாக பணியாற்றுகிறோம்.

### தகவல் மற்றும் போக்குவரத்து நிறுவனங்கள்

#### Pipeline and Hazardous Materials Safety Administration (PHMSA)

PHMSA வரையறுக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் சோர்வுறும் வாய்ப்பு வளங்களை கணக்கில் கொண்டு இயக்குநர் தகுதி மாற்றங்களை (ஆங்கிலத்தில் மட்டும்) தற்காலிகமாக அனுமதித்துள்ளது.

- மருந்து சோதனை தேவைகளில் நெகிழ்வு,
- இயக்குபவர் தகுதி அமலாக்கம் மற்றும் சேவை நேரங்கள் மற்றும் சிறப்பு பயிற்சி தேவைகள் போன்ற கட்டுப்பாட்டு அறை மேலாண்மை தேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

#### Federal Railroad Association (FRA)

- பணியிட பற்றாக்குறை ஏற்பட்டால் சில பாதுகாப்பு தேவைகளை (ஆங்கிலத்தில் மட்டும்) அமல்படுத்துவதை நிறுத்துவதற்கு சில அவசரகால சலுகையை (FRA) வெளியிட்டுள்ளது.
- UTC அதன் வழங்கப்பட்ட அமலாக்க அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது இந்த விட்டுக்கொடுத்தலை பின்பற்றும்.

#### வீட்டுப் பொருள்களை இடம்மாற்றுவோர்

- வீட்டுப்பொருள் இடம்மாற்றுவோர் முகமறைப்புத் துணி அணியவேண்டும்.
- முதல் கட்டத்திலுள்ள மாவட்டத்திற்கு, இடம் மாற்றுவோர் ரியல் எஸ்டேட் பரிவர்த்தனையை முடிப்பதற்காக அல்லது பாதிக்கப்படக்கூடிய நபர்

பாதுகாப்பற்ற சூழலை விட்டுச்செல்வதற்காக மட்டுமே இடமாற்றம் செய்ய முடியும்.

- இரண்டாம் கட்டத்திலுள்ள மாவட்டங்களில், Department of Labor & Industries வரையறுத்துள்ள தொழில் உரிமையாளர் பாதுகாப்புத் தேவைகளை பூர்த்திசெய்யும் பட்சத்தில் இடம் மாற்றுவோர் அனைத்து நடவடிக்கைகளையும் தொடரலாம்.

### Federal Motor Carrier Safety Administration (FMSCA)

- FMSCA அவசர நிவாரணங்களை (உணவு, மருத்துவ உபகரணங்கள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம் போன்றவை) பட்டுவாடா செய்யும் வணிக வாகனங்களுக்கான சேவை நேரத் தேவைகளில், ஓட்டுநர்கள் பட்டுவாடா முடிந்தபின் ஓய்வு நேரம் வழங்கப்படும் பட்சத்தில் ஒரு தற்காலிக சலுகையை அங்கீகரித்துள்ளது.
- FMSCA அவர்களது இணையதளத்தில் (ஆங்கிலத்தில் மட்டும்) இந்த அறிவிப்பு குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- FMCSA ஒரு கொரோனாவைரஸ் (COVID-19) தகவல் பக்கத்தை (ஆங்கிலத்தில் மட்டும்) உருவாக்கியுள்ளது.

### Department of Licensing (DOL)

- The Department of Licensing தற்காலிகமாக ஓட்டுநர்களின் உரிம காலாவதி தேதிகளை 30 நாட்களுக்கு நீட்டித்துள்ளது.
- FMSCA வழிகாட்டுதல்களின் கீழ், DOL மார்ச் 30 முதல் செப். 30 க்குள் காலாவதியாகும் வணிக வாகன ஓட்டுநர் உரிமங்கள் (CDL) மற்றும் வணிகவாகன ஓட்டுநர் அனுமதிகளின் (CDP) காலாவதி தேதிகளை நீட்டிக்கிறது.
- வணிக வாகன ஓட்டுநர்கள் அவர்களது உரிமம் அல்லது அனுமதியின் காலாவதி தேதி மார்ச் 30 அல்லது அதற்குப்பின் என்பதைக் காட்டும் வண்ணம் அவர்களது காலாவதியான மருத்துவ சான்றிதழின் நகலை வைத்திருக்க வேண்டும்.

## திறந்த சந்திப்புகள், கேட்புரைகள் மற்றும் கருத்தரங்கங்கள்

அனைத்து திறந்த சந்திப்புகள், கேட்புரைகள் மற்றும் கருத்தரங்கங்களையும் நாங்கள் தொலைபேசி அல்லது இணையவழியில் நடத்துகிறோம். ஆணைய நிகழ்வில் நீங்கள் பங்கேற்க எண்ணினால், விபரங்களுக்கு நாட்காட்டியை சரிபார்க்கத் தவறாதீர்கள்.

## வாய்ப்பு வளங்கள்

- வாஷிங்டன் மாகாணத்தின் அதிகாரபூர்வ COVID-19 இணையதளம் (ஸ்பானிய மொழி, இரஷ்யமொழி, வியட்நாமிய மொழி, சீனமொழி, ஜப்பானிய மொழி, கொரிய மொழி, பஞ்சாபி, சோமாலிய மொழி, உக்ரேனிய மொழி).
- சுகாதாரத்துறையின் நாவல் கொரோனாவைரஸ் தீவிரத் தொற்று 2019 இணையதளம் (அமெரிக்க சமிக்ஞை மொழி (ASL), சீனமொழி, ஜப்பானிய மொழி, கொரியமொழி, பஞ்சாபி, இரஷ்யமொழி, சோமாலிய மொழி, ஸ்பானிய மொழி, உக்ரேனிய மொழி, வியட்நாமிய மொழி).
- வாஷிங்டனில் நடப்பவை குறித்து அல்லது வைரஸ் எவ்வாறு பரவுகிறது என்பவை குறித்து உங்களுக்குக் கேள்விகள் இருப்பின் 1-800-525-0127 என்ற COVID-19 பிரத்யேக எண்ணை அழைக்கவும். தினமும் காலை 6 முதல் இரவு 10 வரை தொலைபேசி இணைப்பு திறந்திருக்கும்.
- பிற மாகாணங்களின் பயன்பாட்டு ஆணைங்கள் என்ன வழிகாட்டுதலை வெளியிட்டுள்ளன என்பதைக் காண NARUC மாகாண எதிர்வினை தடம் காட்டிக்கு (ஆங்கிலத்தில் மட்டும்) வருகை தரவும்.

## அணுகல்

வேறொரு வடிவத்தில் இந்தத் தகவல் தேவையா? 1-800-833-6384 என்ற எண்ணிலோ அல்லது வாஷிங்டன் அஞ்சல் சேவைகளின் வாயிலாக உரை தொலைவழி தட்டச்சுக்கு (TTY) 711 என்ற எண்ணையோ அழைக்கவும்.

UTC பல மொழிகளில் உங்களுக்கு உதவ முடியும். 1-888-333-9882 என்ற எண்ணை திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 முதல் பின்மதியம் 5 வரையில் அழைத்து ஒரு மொழிபெயர்ப்பாளரைக் கேளுங்கள்.